# THE TAMIL NADU Dr. AMBEDKAR LAW UNIVERSITY

(State University Established by Act No. 43 of 1997)

## SCHOOL OF EXCELLENCE IN LAW

"*Perungudi Campus*", MGR Salai, Perungudi, Chennai- 600 113

Telephone Nos.044- 22439161; Fax: 24617996

**PROF. [Dr]. V. BALAJI**, M.L., Ph.D.,
**DEAN**


C.No.3645/SOEL/UG/S2/2023
21.12.2023

## CIRCULAR

**Sub:** The Tamil Nadu Dr.Ambedkar Law University – School of Excellence in Law - U.G. Programmes – Academic Year 2023-2024 - Final Year Students of U.G. (Hons.) & P.G. (CBCS) Degree Programmes – Students under the Category of SC & ST - Providing of Scholarship for the Internship Period – Requisite information to be furnished in the Government Portal through online by the Students as per G.O. Ms.No.93 dated 24.07.2023 - Intimated - Reg.

**Ref:** அரசு செயலாளர், ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் நலத்(ஆதிந-3)துறை, தமிழ் நாடு அரசு, அவர்களின் அரசாணை (நிலை) எண்.93 நாள்: 24.07.2023

********

It is informed that **'Scholarship'** is being provided to the Final Year Students pursuing the Law Degree Programmes belonging to the SC/ST Category for the Internship period, vide Government Order referred above.

In this regard, the Final Year Students of the U.G. Honours Degree Programmes and P.G. Degree Programmes, School of Excellence in Law, who belonging to the SC/ST Category, are hereby required to apply the requisite information in the **Government Portal : tnadwscholarship.tn.gov.in** as mentioned in the Government Order through Online, on or before **26.12.2023 by 5.00 p.m.**

It is also informed that the Students are further required to update the said information to the Dean, School of Excellence in Law (E.Mail ID : deantndalu@gmail.com) through **'The Director, Internship, School of Excellence in Law, Tamil Nadu Dr.Ambedkar Law University, Chennai** for information.

The Government Order referred above is annexed herewith for reference.

**DEAN**

To:
1.All the Final Students of UG (Hons.) & P.G. (CBCS), School of Excellence in Law, TNDALU – **through University Website.**
2. The Notice Board.

**Copy to:**
1. The P.S. for placing before the Hon'ble Vice-Chancellor for kind perusal and information
2. The Registrar, TNDALU
3. The Academic Advisor
4. The Admin. Advisor/Campus Director, TNDALU
5. The Director, P.G. (CBCS), SOEL, TNDALU.
6. All the Directors of U.G.(Hons.), School of Excellence in Law, TNDALU.
6. The Librarian, TNDALU [for information and also to upload in the University Website]
7. The Director, Internship, SOEL, TNDALU.
8. The Deputy Wardens, Hostels (Poompozhil, Perungudi and Chepauk)

SCHOOL OF EXCELLENCE IN LAW, CHENNAI 113
3645
19 DEC 2023
DEAN

**சுருக்கம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – 2023–2024–ஆம் ஆண்டின் மாண்புமிகு அமைச்சர் (ஆதிந) அவர்களின் அறிவிப்பு – அரசு சட்டக்கல்லூரிகளில் இறுதி ஆண்டு பயின்றுவரும் 650 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கருக்கு உட்பயிற்சி (Internship) காலங்களுக்கான உட்பயிற்சி உதவித்தொகை ரூ.65,00,000/– வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் நலத்(ஆதிந–3)துறை**

அரசாணை (நிலை) எண்.93

நாள்: 24.07.2023.
சோபகிருது வருடம், ஆடி 8–ஆம் நாள்.
திருவள்ளுவர் ஆண்டு 2054.
படிக்கப்பட்டது.

ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கடித ந.க.எண்.ம2/ 12112/ 2023, நாள்: 15.06.2023.

-----

**ஆணை:–**

2023–2024 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்டக் கூட்டத் தொடரில் , "அரசு சட்டக்கல்லூரிகளில் இறுதி ஆண்டு பயின்று வரும் 500 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கருக்கு அவர்களது பாடத்திட்டத்திற்கு ஏற்ப உட்பயிற்சி (Internship) காலங்களுக்கான உட்பயிற்சி உதவித்தொகை ரூ.1.00 கோடி செலவில் வழங்கப்படும் என மாண்புமிகு அமைச்சர் (ஆதிதிராவிடர் நலம்) அவர்களால் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், மேற்குறிப்பிட்டுள்ள அறிவிப்பிற்கிணங்க கீழ்கண்டவாறு கருத்துருவினை ஆதிதிராவிடர் நல இயக்குநர் அரசுக்கு அனுப்பியுள்ளார்.

**உட்பயிற்சி காலம்**

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் உட்பயிற்சி விதிமுறைகளில் Rule 25 of the Bar Council of India Under Advocates Act 1961–ன் படி சட்டம் பயிலும் மாணவர்கள் 2 வருட கால படிப்பிற்கு குறைந்த பட்சம் 4 வாரங்கள், 3 வருட கால படிப்பிற்கு குறைந்த பட்சம் 12 வாரங்கள் மற்றும் 5 வருட கால படிப்பிற்கு குறைந்த பட்சம் 20 வாரங்கள் உட்பயிற்சி (Internship) பெற வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

<u>உட்பயிற்சி பெறும் இடங்கள்:</u>

நீதிமன்றம், 10 வருடத்திற்கு மேல் நீதித்துறையில் அனுபவமுள்ள மூத்த வழக்கறிஞர், அரசுத்துறைகள், கார்பரேட் நிறுவனங்கள், குழுக்கள், ஆணையங்கள், கன்சல்டன்சிஸ் நிறுவனங்கள், அரசு சாரா தொண்டு நிறுவனங்கள்,சந்தை நிறுவனங்கள் (Market Institutions), வங்கிகள் மற்றும் துறையினால் பரிந்துரைக்கப்பட்ட பிற நிறுவனங்கள் மூலம் மாணாக்கர்கள் உட்பயிற்சி பெறலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

<u>உட்பயிற்சியின் (Internship) பயன்கள் :</u>

அரசு சட்டக் கல்லூரிகளில் பயின்று வரும் மாணாக்கர்கள் சட்டத்தொழிலில் சிறந்து விளங்கவும், பல்வேறு துறைகளைப்பற்றி (கார்ப்பரேட், அரசுத்துறை, குழுக்கள், ஆணையம்) அறிந்து கொண்டு சட்டம் தொடர்பான வேலைவாய்ப்புகளை தேர்வு செய்வதற்கும் தன்னிச்சையாக சட்டப்பயிற்சி பெறுவதற்கும் உட்பயிற்சி (Internship) வழிகாட்டியாக உள்ளது.

எனவே, அரசு சட்டக் கல்லூரிகளில் பயின்று வரும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மாணாக்கர்கள் சட்டத்தொழிலில் சிறந்து விளங்குவதற்கும், வேலைவாய்ப்புகளை பெறுவதற்கும் உட்பயிற்சி (Internship) உதவித்தொகை வழங்குவது பயனுள்ளதாக அமையும்.

<u>உட்பயிற்சி உதவித்தொகை பெறுவதற்கான தகுதிகள் :</u>

இத்திட்டத்தின் கீழ் பயன்பெற விண்ணப்பதாரர் கீழ்கண்ட தகுதிகளை பூர்த்தி செய்திருக்க வேண்டும் .

1. ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர் இனத்தைச் சார்ந்தவராக இருக்க வேண்டும்.
2. குடும்ப ஆண்டு வருமான உச்ச வரம்பு ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். (ஆதிதிராவிடர் ப்ரிமெட்ரிக்/போஸ்ட்மெட்ரிக் கல்வி உதவித் தொகைக்கான ஆண்டு வருமான உச்ச வரம்பு )
3. தமிழ்நாட்டில் உள்ள அரசு சட்டக்கல்லூரியில் இரண்டு, மூன்று மற்றும் ஐந்து வருட கால சட்டப் படிப்பில் இறுதி ஆண்டு பயின்று வருபவராக இருக்க வேண்டும்.
4. இந்நிதியுதவி ஒரு நபருக்கு ஒரு முறை மட்டுமே வழங்கப்படும்.
5. மாணக்கர்கள் இறுதியாண்டு சட்டப்படிப்பிற்கு ஏற்கனவே பெற்றுவரும் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகையுடன் கூடுதலாக இவ்வுதவித்தொகை வழங்கப்படும்.
6. சட்டப்படிப்பு பயிலும் மாணவர்கள் தலைசிறந்த சட்ட நிறுவனங்கள்/ வழக்கறிஞர்களிடம் உட்பயிற்சி (Internship) மேற்கொள்ள வேண்டும்.

<u>விண்ணப்பிக்கும் முறை :</u>

இத்திட்டத்தின் கீழ் உட்பயிற்சி (Internship) உதவித்தொகை பெற விரும்பும் மாணாக்கர்கள் tnadwscholarship.tn.gov.in என்ற இணைய தளத்தில் விண்ணப்பிக்க வேண்டும். இவ்விண்ணப்பம் இணைய தளம் மூலமே சரி பார்க்கப்படும்.

<u>உதவித்தொகை :</u>

இத்திட்டத்தின் கீழ் ஒரு மாணவ/மாணவியருக்கு ரூ.15,000/– உட்பயிற்சி (Internship) உதவித்தொகை வழங்கப்படும். இத்தொகை அரசு சட்டக் கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்களில் உட்.பயிற்சி (Internship) உதவித்தொகைக்கு விண்ணப்பித்த மாணாக்கர்களில் தகுதியுள்ள மாணாக்கருக்கு உட்பயிற்சி (Internship) உதவித்தொகை ஆதிதிராவிடர் நல இயக்குநரால் நேரடியாக மின்னணு பரிவர்த்தனை (ECS) முறையில் வழங்கப்படும் என்றும் தெரிவித்து, 2023–24 ஆம் ஆண்டு அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டது போன்று சட்டக் கல்லூரியில் இறுதி ஆண்டு பயிலும் மாணாக்கர்களுக்கு மட்டும் உட்பயிற்சி உதவித்தொகை ரூ.15,000/– வீதம் வழங்க நிர்வாக அனுமதி வழங்குமாறு ஆதிதிராவிட நல இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

மேலும் தமிழ்நாட்டில் இயங்கும் அரசு சட்டக் கல்லூரிகளில் சட்டப்படிப்பு பயிலும் 650 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணாக்கர்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையில் கல்வி உதவித்தொகை கோரி tnadwscholarship.tn.gov.in என்ற இணையதளத்தில் விண்ணப்பித்துள்ளனர் என்றும் அதனடிப்படையில் உட்பயிற்சி (Internship) உதவித்தொகை ஒரு மாணாக்கருக்கு ரூ.15,000/– வீதம் 650 மாணாக்கருக்கு ரூ. 97,50,000/–யினை விடுவிக்க, 2023–24 ஆம் நிதி ஆண்டிற்கு உரிய கணக்கு தலைப்பின் கீழ் துணை கணக்கு தலைப்பு உருவாக்கி அதில் நிதி ஒதுக்கீடு வழங்குமாறும் மற்றும் இனிவருங்காலங்களில் மாணாக்கர்களின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு உட்பயிற்சி உதவித்தொகை வழங்க தொடரும் செலவினமாக 2225–01–277–AB என்ற கணக்குத் தலைப்பில் நிதி ஒப்பளிப்பு வழங்க அரசினை கோரியுள்ளார்.

3. இந்நிலையில், மாண்புமிகு அமைச்சர் (ஆதிந) அவர்களின் அறிவிப்பின்படி, ஆதிதிராவிட நல இயக்குநரிடமிருந்து பெறப்பட்ட கருத்துருவினை அரசு நன்கு ஆய்வுசெய்து அதனை ஏற்று அரசு சட்டக்கல்லூரிகளில் இறுதி ஆண்டு பயின்றுவரும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கருக்கு 2023–2024–ஆம் கல்வியாண்டில் சிறந்த சட்ட நிறுவனங்கள்/வழக்கறிஞர்களிடம் அவர்கள் பாடத்திட்டத்திற்கேற்ப உட்பயிற்சி பெறுவதற்கு உட்பயிற்சி உதவித் தொகையாக ரூ.10,000/– வீதம் 650 மாணாக்கருக்கு ரூ.65,00,000/– (ரூபாய் அறுபத்தைந்து இலட்சம் மட்டும்) வழங்க கீழ்க்கண்ட நிபந்தனைக்குட்பட்டு நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது. 2023–2024–ஆம் கல்வியாண்டில் மேற்கண்ட உட்பயிற்சி பெறுவதற்கு மேலும் கூடுதலாக மாணாக்கர் விண்ணப்பிக்கும் நிலையில்

அவர்களுக்கு அனுமதிக்கப்பட்ட கல்வி உதவித்தொகை தலா ரூ.10,000/- வழங்க ஆதிதிராவிட நல இயக்குநருக்கு அனுமதி அளித்தும் அரசு ஆணையிடுகிறது.

1. ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர் இனத்தைச் சார்ந்தவராக இருக்க வேண்டும்.
2. குடும்ப ஆண்டு வருமான உச்ச வரம்பு ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். (ஆதிதிராவிடர் ப்ரிமெட்ரிக்/போஸ்ட்மெட்ரிக் கல்வி உதவித் தொகைக்கான ஆண்டு வருமான உச்ச வரம்பு )
3. தமிழ்நாட்டில் உள்ள அரசு சட்டக்கல்லூரியில் இரண்டு, மூன்று மற்றும் ஐந்து வருட கால சட்டப் படிப்பில் இறுதி ஆண்டு பயின்று வருபவராக இருக்க வேண்டும்.
4. இந்நிதியுதவி ஒரு நபருக்கு ஒரு முறை மட்டுமே வழங்கப்படும்.
5. மாணக்கர்கள் இறுதியாண்டு சட்டப்படிப்பிற்கு ஏற்கனவே பெற்றுவரும் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகையுடன் கூடுதலாக இவ்வுதவித்தொகை வழங்கப்படும்.
6. சட்டப்படிப்பு பயிலும் மாணவர்கள் தலைசிறந்த சட்ட நிறுவனங்கள் / வழக்கறிஞர்களிடம் உட்பயிற்சி (Internship) மேற்கொள்ள வேண்டும்.
7. இத்திட்டத்தின் கீழ் உட்பயிற்சி (Internship) உதவித்தொகை பெற விரும்பும் மாணாக்கர்கள் tnadwscholarship.tn.gov.in என்ற இணைய தளத்தில் விண்ணப்பிக்க வேண்டும். இவ்விண்ணப்பம் இணையதளம் மூலமே சரிபார்க்கப்படும்.

4. மேலே பத்தி மூன்றில் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

2225-ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் -01 - ஆதிதிராவிடர் நலன்-277-கல்வி மாநிலச் செலவினங்கள் - AB - கல்விச் சலுகைகள் 372 பயிற்சி - 01 பயிற்சி.

(த.தொ.கு. 2225-01-277-AB 37201)

5. மேலே பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.65,00,000/- 2023-2024-ஆம் நிதி ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு/இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும், மேற்கண்ட செலவினம் 2023-2024-ஆம் நிதி ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் கொணர்ந்து சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட ஆதிதிராவிடர் நல இயக்குநர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும்,

பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை, 2023–2024–ஆம் நிதி ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு உரிய வரைவு விளக்கக்குறிப்பினையும் மற்றும் திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவையும் தவறாது நிதித்(ஆதி(ம)பந/வ.செ.பொ–I) துறைக்கு அனுப்பிவைக்குமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. ஒவ்வொரு ஆண்டும் சட்டப்படிப்பு இறுதியாண்டு பயிலும் மாணவர்களுக்கு உட்பயிற்சி (Internship) வழங்கப்பட்ட விவரங்கள் அடங்கிய அறிக்கையினை அரசுக்கு அனுப்பிவைக்குமாறு ஆதிதிராவிட நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண். 26318, நிதி(ஆதி&பந) துறை, நாள் 19.07.2023–இல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.566 (ஐநூற்று அறுபத்தாறு) (IFHRMS ASL No.2023070566)

(ஆளுநரின் ஆணைப்படி)

க. லட்சுமி பிரியா
அரசு செயலாளர்.

<u>பெறுநர்</u>

இயக்குநர், ஆதிதிராவிடர் நலம், சென்னை–600 005
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை–600 005
இயக்குநர், சட்டக்கல்வி இயக்ககம்,
198, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, கீழ்ப்பாக்கம், சென்னை–10.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் (ம) பழங்குடியின நல அலவலர்கள்
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை –600 006/18/35.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை –600 008.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்

<u>நகல்</u>

மாண்புமிகு ஆதிதிராவிடர் நல அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதி (ஆதி(ம)பந/வ.செ.பொ.1/2/வ.வ.1) துறை, சென்னை–600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் செயலாளரின் தனிச் செயலர், சென்னை–600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் அனைத்து பிரிவுகள், சென்னை–600 009.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

ஞா. தங்கம்
24-7-2023
பிரிவு அலுவலர்.
24.07.2023